பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 09 2024 **MONDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரித்து வருவது இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்தின் வெற்றியை பிரதிபலிக்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. ஜமைக்கா பிரதமர் டாக்டர் **Andrew Holness** நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

3. தேசிய ஊட்டச்சத்து மாதத்தின் நிறைவு நிகழ்ச்சி இன்று ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடைபெறவுள்ளது.

4. ஏமனில் உள்ள ஹௌதி கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மீது, இஸ்ரேல் நேற்று வான்தாக்குதல் நடத்தியது.

5. உலக இளையோர் **Wushu** சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 2 தங்கம் உட்பட 7 பதக்கங்களை வென்றது.

**>>>>><<<<<**

வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரித்து வருவது இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்தின் வெற்றியை பிரதிபலிக்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் நேற்று ஒலிபரப்பான மன்கிபாத் நிகழ்ச்சியில் பேசியபோது இதனை அவர் தெரிவித்தார்.

தூய்மையே சேவை இயக்கத்தில் பொதுமக்கள் அனைவரும் தொடர்ந்து பங்கேற்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவில் உருவாக்கப்படும் படைப்பாற்றல் திறன், உலகத்திற்கான படைப்பாற்றலாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இளைஞர்கள் செயல்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அனிமேஷன், இணைய விளையாட்டு, திரைப்படத் தயாரிப்பு ஆகிய துறைகளில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் படைப்பாற்றல் திறன்கள் அபரிமிதமான வளர்ச்சியடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் உருவாக்குவோம் என்ற தலைப்பில் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் நடத்தும் 25 போட்டிகளில் பங்கேற்குமாறு படைப்பாளிகளுக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

இந்த போட்டியில் பங்கேற்போர், **Wavesindia.org** என்ற வலைதளத்தை பார்வையிடுமாறும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

அடுத்த ஆண்டு பிப்பிரவரி மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாட்டிற்கு முன்னோடியாக இந்தப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

**>>>>><<<<<**

இந்தியாவுடன் நட்புறவை பேணியிருந்தால், நிதி நெருக்கடியில் சிக்கியிருக்கும் பாகிஸ்தானுக்கு சர்வதேச செலாவணி நிதியத்திடம் கோரியதைவிட அதிக தொகையை இந்தியா, அந்நாட்டிற்கு வழங்கியிருக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் நேற்று பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர், 2014-15ஆம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்ட பிரதமரின் மேம்பாட்டுத் திட்டத்தால் அம்மாநிலம் அடைந்துள்ள பலனை எடுத்துரைத்தார்.

**>>>>><<<<<**

ஜமைக்கா பிரதமர் டாக்டர் **Andrew Holness** நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

திரு. **Andrew** பிரதமராக பதவியேற்ற பின்பு, இந்தியாவுக்கு வருகை தருவது இதுவே முதல்முறையாகும்.

முன்னதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடியும், ஜமைக்கா பிரதமரும் பல்வேறு தருணங்களில் சந்தித்து பேசியுள்ளனர்.

ஜமைக்கா பிரதமருடன், அந்நாட்டின் உயர்நிலைக் குழுவும் இந்தியாவுக்கு வருகிறது.

புதுதில்லியில் குடியரசுத்தலைவர் திருமதி, திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோரை ஜமைக்கா பிரதமர் சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

தொழில் மற்றும் வர்த்தக சங்க பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து பேசவுள்ளார்.

இந்தியா-ஜமைக்கா நாடுகளுக்கு இடையே வரலாற்று ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் வலுவான பிணைப்பு உள்ளது.

>>>>><<<<<

தொழிலாளர் நலச் சட்ட சீர்திருத்தங்கள் குறித்த மண்டல அளவிலான கூட்டம் லக்னோவில் இன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தில்லி, உத்தரபிரதேசம், பீகார், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

தேசிய அமைப்புசாரா தொழிலாளர் தரவு தளம், கட்டுமான தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிகள், தொழிலாளர்களுக்காக அமல்படுத்தப்பட்டு வரும் மருத்துவ வசதிகள், மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டம் உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ஷோபா கரந்லாஜே தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் சம்மந்தப்பட்ட மாநிலங்களின் தொழிலாளர் நலத்துறை உயரதிகாரிகள் கலந்து கொள்கிறார்கள்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் மூன்றாவது மற்றும் இறுதிகட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் ஓய்ந்தது.

மூன்றாவது கட்டமாக ஏழு மாவட்டங்களில் உள்ள 40 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவிற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

40 தொகுதிகளில் 16 தொகுதிகள் கஷ்மீரிலும், 24 தொகுதிகள் ஜம்மு மண்டலத்திலும் உள்ளன.

39 லட்சத்து 18 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

கடைசி கட்ட தேர்தலில் 415 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

ஜம்மு காஷ்மீரில் மூன்று கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது.

ஏற்கனவே நடைபெற்ற முதற்கட்ட தேர்தலில் 61 சதவீத வாக்குகளும், இரண்டாவது கட்ட தேர்தலில் 57 சதவீத வாக்குகளும் பதிவானது.

மூன்று கட்ட தேர்தல்களில் பதிவான வாக்குகள் வரும் 8ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும்.

>>>>><<<<<

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இம்மாதம் இந்தியப் பங்குச்சந்தைகளில் 57 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

பங்குச்சந்தையில் மொத்தம் 57 ஆயிரத்து 359 கோடி ரூபாய் கடந்த மாதம் அந்நிய முதலீட்டாளர்களால் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கடந்த ஒன்பது மாதங்களில் இதுவே அதிகபட்ச முதலீடு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் சந்தையில் 877 கோடி ரூபாய் அந்நிய முதலீட்டாளர்கள், முதலீடு செய்துள்ளதாகவும், இந்திய சந்தைகளில் தொடர்ந்து அந்நிய முதலீடு அதிகரித்து வருவதாகவும் அரசு கூறியுள்ளது.

இந்த ஆண்டு இதுவரை, சுமார் 2 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய முதலீட்டாளர்கள் முதலீடு செய்துள்ளனர்.

>>>>><<<<<

அனைவருக்கும் வளர்ச்சி தொடர்பான மக்கள் திட்ட இயக்கம் குறித்த தேசிய பயிலரங்கம், புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் இந்த பயிலரங்கை, மத்திய பஞ்சாயத்ராஜ் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் தொடங்கி வைக்கிறார்.

பயனுள்ள பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கவதற்கான உத்திகள் தொடர்பாக இந்த பயிலரங்கில் விவாதிக்கப்படவுள்ளது.

மத்திய – மாநில அரசுகளின் பல்வேறு துறைகளின் பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் இந்த பயிலரங்கில் கலந்து கொள்கிறார்கள்.

>>>>><<<<<

மக்களின் நம்பிக்கையை காக்கும் வகையில் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலினும், புதிய அமைச்சர்களும் செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், துணை முதலமைச்சர் பொறுப்பு திரு. உதயநிதி ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டுள்ளது, தனக்கு துணையாக இருப்பதற்காக அல்ல என்றும் மக்களுக்கு துணையாக இருப்பதற்காக என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவையில் இணைந்துள்ள திரு. செந்தில் பாலாஜி, திரு. கோவி. செழியன், திரு. ராஜேந்திரன், திரு. நாசர் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்துள்ள முதலமைச்சர், மிகுந்த நம்பிக்கையோடு வாக்களித்துள்ள மக்களின் நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில் அனைவரும் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

தேசிய ஊட்டச்சத்து மாதத்தின் நிறைவு நிகழ்ச்சி இன்று ஜார்க்கண்ட் மாநிலம், ராஞ்சியில் நடைபெறவுள்ளது.

அம்மாநில ஆளுநர் திரு. சந்தோஷ் கங்குவார் முன்னிலையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ன தேவி பங்கேற்கிறார்.

ஏழாவது தேசிய ஊட்டச்சத்து மாதம் கடந்த மாதம் 1ஆம் தேதி தொடங்கி இன்று வரை நடைபெறுகிறது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்தின் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

>>>>><<<<<

ஏமனில் உள்ள ஹௌதி கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மீது, இஸ்ரேல் நேற்று வான்தாக்குதல் நடத்தியது.

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேலை நோக்கி, சமீபத்தில் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த வான் தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

ஏமனில் ஹௌதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் மற்றும் மின்நிலையங்கள், துறைமுகம் ஆகியவற்றின் மீது வலுவான தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

இந்த தாக்குதலில் 4 பேர் உயிரிழந்ததாகவும், 29 பேர் காயமடைந்ததாகவும் ஹௌதி கிளர்ச்சியாளர்களின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் நேற்றிரவு கனமழை பெய்தது.

இதன் காரணமாக, நகரின் பல பகுதிகளில் தண்ணீர் தேங்கி நின்றது.

விடுமுறை நாள் என்பதால் பொழுதுபோக்கு மையங்களுக்கு சென்ற பொதுமக்கள், வீடுகளுக்கு திரும்பும்போது சிரமத்தை எதிர்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அதேநேரத்தில், கடந்த சில நாட்களாக நகரில் நிலவிய கடும் வெப்பத்திலிருந்து மக்கள் சற்று நிம்மதி அடைந்ததாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில் தெலங்கானா மாநிலத்தில் 17 மாவட்டங்களில் இன்று இடிமின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

உலக இளையோர் **Wushu** சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 2 தங்கம் உட்பட 7 பதக்கங்களை வென்றது.

புருனேயில் நடைபெற்ற இப்போட்டியில் 48 கிலோ எடைப்பிரிவில் **Aryan** சீன வீரரை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மற்றொரு பிரிவில் **Shaurya,** ஈரான் வீரரை வென்று தங்கப்பதக்கம் வென்றார்.

**>>>>><<<<<**

தேசிய மகளிர் இளையோர் ஹாக்கி சாம்பியன் போட்டி, ராஞ்சியில் இன்று தொடங்குகிறது.

26 அணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டி, பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் அணி காலிறுதிக்கு தகுதி பெறும்.

காலிறுதிப் போட்டி அக்டோபர் 7ஆம் தேதியும், அரையிறுதிப் போட்டி 9ஆம் தேதியும் நடைபெறும்.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில், நேற்று கேரளா - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் 1-1 என்ற கோல்கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் பெங்களூரு மற்றும் பஞ்சாப் அணிகள் தலா 3 போட்டிகளில் வெற்றிபெற்று, 9 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளன.

>>>>>END<<<<<